# தமிழ்

## 3



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்

## 3 ஆம் ஆண்டு

கல்வி வெளியீட்டுத் திணைக்களம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| முதலாம் பதிப்பு | 1986 |
| இரண்டாம் பதிப்பு | 1988 |
| மூன்றாம் பதிப்பு | 1989 |
| நான்காம் பதிப்பு | 1990 |
| ஐந்தாம் பதிப்பு | 1991 |
| ஆறாம் பதிப்பு | 1992 |
| ஏழாம் பதிப்பு | 1993 |
| எட்டாம் பதிப்பு | 1994 |
| ஒன்பதாம் பதிப்பு | 1995 |
| பத்தாம் பதிப்பு | 1996 |
| பதினோராம் பதிப்பு | 1997 |
| பன்னிரண்டாம் பதிப்பு | 1998 |
| பதின்மூன்றாம் பதிப்பு | 1999 |

எல்லா உரிமையும் இலங்கை அரசினர்க்கே.

இந்நூல் காலி, உபுலி அச்சகத்தில் அச்சிடப்பட்டுக் கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தினால் வெளியிடப்பட்டது.

2000/௦௨/3/37/ (100000)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேசிய கீதம்

சிறீ லங்கா தாயே - நம் சிறீ லங்கா
நமோ நமோ நமோ நமோ தாயே

நல்லெழில் பொலி சீரணி
நலங்கள் யாவும் நிறை வான்மணி லங்கா
ஞாலம் புகழ் வள வயல் நதி மலை மலர்
நறுஞ்சோலை கொள் லங்கா
நமதுறு புகலிடம் என ஒளிர்வாய்
நமதுதி ஏல் தாயே
நமதலை நினதடி மேல் வைத்தோமே
நமதுயிரே தாயே - நம் சிறீ லங்கா
நமோ நமோ நமோ நமோ தாயே.

நமதாரருள் ஆனாய்
நவை தவிர் உணர்வானாய்
நமதேர் வலியானாய்
நவில் சுதந்திரம் ஆனாய்
நமதிளமையை நாட்டே
நகு மடி தனையோட்டே
அமைவுறும் அறிவுடனே
அடல்செறி துணிவருளே - நம் சிறீ லங்கா
நமோ நமோ நமோ நமோ தாயே.

நமதார் ஒளி வளமே
நறிய மலர் என நிலவும் தாயே
யாமெலாம் ஒரு கருணை அனைபயந்த
எழில்கொள் சேய்கள் எனவே
இயலுறு பிளவுகள் தமை அறவே
இழிவென நீக்கிடுவோம்
ஈழ சிரோமணி வாழ்வுறு பூமணி
நமோ நமோ தாயே - நம் சிறீ லங்கா
நமோ நமோ நமோ நமோ தாயே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லறம் அறிவான்ற தலைமுறை
நம் நாட்டிலே தோன்றிட
நம் மரசளிக்கும் கொடையிது
நல்வழி காட்டும் நல்லொளியாம் !

உங்கள் பின்வரும்
உடன்பிறவிகள் பொருட்டும்
உணர்வுடன் இதைப்பேணல்
உங்கள் கடனெனக் கொள்வீர் !

அறிவை வளர்த்திடச் சமவுரிமை
அனைவர்க்கும் வழங்கும் நோக்கில்
அரசு தரும் ஏடிதை
அக மகிழ்ந்து ஏற்றிடுவீர் !

றிச்சட் பதிறண
கல்வி, உயர் கல்வி அமைச்சர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னுரை

புதிய பாடத்திட்டத்திற்கு அமைய, தமிழ் - முதலாம் ஆண்டு, தமிழ் - 2ம் ஆம் ஆண்டு என்ற நூல்களின் தொடர்ச்சியாகவே இந்நூல் வெளிவருகின்றது. சிறுவர்களின் உளவியல், வயது, சுற்றாடல், மொழியறிவு என்பவற்றிற்கு அமைய விளக்கப் படங்களுடன் இந்நூல் ஆக்கப்பட்டுள்ளது. இந்நூலுடன் பயன் படுத்துவதற்குச் செயல்நூல் வேறாக வெளியிடப்பட மாட்டாது. எனவே, செயல்நூலிற் செய்ய வேண்டிய பயிற்சிகள் எல்லாம் இந்நூலிற் சேர்க்கப்பட்டுள்ளன.

இந்நூலைப் பயன்படுத்தும் மாணவர்கள் இதற்கு உறைபோட்டு அந்த உறையில் மட்டுமே தம் பெயரை எழுதலாம். இந்த நூலினுள்ளோ, அதன் அட்டையிலோ தம் பெயரை எழுத வேண்டிய இடத்திலன்றி வேறு இடங்களில் எழுதக்கூடாது. இந்நூலிலே பென்சிலாலோ, பேனையாலோ எந்த விதமான அடையாளங்களையும் இடக்கூடாது; எதனையும் எழுதவுங் கூடாது. அடையாளமிட்ட, அல்லது எழுதிய புத்தகங்களை மீள மாணவர்களுக்குக் கொடுக்கமுடியாது என்பதனால், இந்நூலை மாணவர்கள் அவதானமாகப் பயன்படுத்துவதைக் கவனித்தல் ஆசிரியரின் முக்கிய கடமையாகும். இடைவெளிகளை நிரப்புவதற்காகப் பார்த்து எழுதவேண்டிய பகுதிகளை மாணவர் வீட்டு வேலையாகச் செய்து, இடைவெளிகளை நிரப்பும் வேலையை வகுப்பிற் செய்யலாம்.

இப்பதிப்பில் (1986) சில திருத்தங்கள் செய்யப்பட்டுள்ளன.

இந்நூல் பற்றி அநுபவம் நிறைந்த ஆசிரியர்களின் ஆலோசனைகளை நாம் வரவேற்கின்றோம்.

இந்நூலுக்குரிய பாடங்களை எழுதிய எழுத்தாளர்களுக்கும், பாடல்களை அளித்த புலவர்களுக்கும், விளக்கப்படங்களை அழகுறச் சித்திரித்துள்ள ஓவியருக்கும், நூல் சிறப்புற வெளிவருவதற்கு உதவிய ஆலோசகர்களுக்கும் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இந்நூல் 1999ஆம் ஆண்டு விநியோகத்திற்கென மறு பதிப்புச் செய்யப்பட்டுள்ளது. இப்பதிப்பிற்குப் பல்வேறு வழிகளிலும் உதவிய சகலருக்கும் உள்ளங்கனிந்த நன்றி உரித்தாகுக.

ஈ. டப்லியூ. அபேநாயக்க
பதில் கல்வி வெளியீட்டு ஆணையாளரும்
பிரதிக் கல்விப் பணிப்பாளர் நாயகமும்

கல்வி வெளியீட்டுத் திணைக்களம்,
"இசுருபாய"
பத்தரமுல்லை.
1998 - 03 - 05



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூலாக்கக் குழு

செ. வேலாயுதபிள்ளை
கலாநிதி சிரோன்மணி இராசரத்தினம்
புஷ்பா சிவகுமாரன்
முக்தார் ஏ. முஹம்மது
த. கனகரத்தினம்
இராசேஸ்வரி செல்வரத்தினம்

ஓவியர்

ஏ. ஜேசுதாசன் (சுதா)

பதிப்பாசிரியர்கள்

வை. எல். எம். றாஸீக்

எம். ஐ. எஸ். ஏ. கலீல்

கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தால் ஏலவே வெளியிடப்பட்ட நூல்களைத் தழுவி இந்நூல் ஆக்கப்பட்டுள்ளது.

பாடல்களை அளித்த புலவர்களுக்கு நன்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளுறை


| பாடம் | | பக்கம் |
|---|---|---|
| 1. | பட்டம் கட்டுவோம் ... | 1 |
| 2. | சிறுவனும், காக்கையும் | 3 |
| 3. | பூனைக் குட்டிகளின் ஏமாற்றம் ... | 5 |
| 4. | புத்திமான் பலவான் | 7 |
| 5. | யானை ... | 11 |
| 6. | பயணம் போனேன் ... | 15 |
| 7. | தாடி அறுந்த வேடன் | 19 |
| 8. | ஔவையாரும், முருகனும் | 23 |
| 9. | கடல் | 27 |
| 10. | ஓநாயும், ஆமையும் ... | 29 |
| 11. | எலி வளையில் விருந்து ... | 31 |
| 12. | பிராணிகளின் கொண்டாட்டம் ... | 33 |
| 13. | பழங்கள் | 36 |
| 14. | உமர் பாறூக் அவர்களின் கருணை ... | 39 |
| 15. | தென்னாலி இராமன் | 42 |
| 16. | சுப்பிரமணிய பாரதியார் ... | 47 |
| 17. | ஆபிரகாம் இலிங்கன் | 50 |
| 18. | அப்பிள் பழமும், நியூற்றனும் | 54 |
| 19. | சிங்கமும், தேனீயும் ... | 57 |
| 20. | உண்மை பேசு | 60 |
| | மாதிரி வினாப் பத்திரம் ... | 64 |





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 1. பட்டம் கட்டுவோம்




சுந்தரமும், அமீரும், பாலனும் விளையாடிக்கொண்டு நின்றனர். அப்பொழுது பட்டம் கட்டுவோம் என்றான் சுந்தரம். பட்டம் கட்டுவதற்கு அமீர் ஈர்க்கு எடுத்தான். அவன் அதனை அழுத்தமாகச் சீவி, அளந்து, முறித்தான். பாலன் கடதாசி எடுத்து அளவாக வெட்டினான். சுந்தரம் ஈர்க்குகளினால் எட்டு மூலைப் பட்டம் கட்டினான். அவன் கடதாசியை அதன் மேல் ஒட்டினான். பட்டம் கட்டி முடிந்தது. அவர்கள் பட்டத்துக்கு வால் ஒன்று செய்தார்கள். அவர்கள் அதனைப் பட்டத்திற் கட்டினார்கள்.



சுந்தரம் பட்டத்தை எடுத்தான். அமீர் நூலைச் சுற்றினான். சிறுவர்கள் மூவரும் பட்டம் விடுவதற்கு விளையாட்டுத் திடலுக்குப் போனார்கள். பாலன் பட்டத்தில் நூலைக் கட்டினான். சுந்தரம் பட்டத்தை எடுத்தான். அமீர் நூலைப் பிடித்தான். அவர்கள் காற்று வீசும் போது பட்டத்தை ஏற்றினார்கள். பட்டம் மெல்ல மெல்ல மேலே ஏறியது. அது அங்கும் இங்கும் காற்றில் ஆடி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அசைந்தது. அமீர் நூலின் நுனியை மரம் ஒன்றிலே கட்டினான். பட்டம் மேலே பறந்துகொண்டு இருந்தது. மூவரும் தங்கள் கைகளைத் தட்டி மகிழ்ந்தார்கள்.

நாங்களும் பட்டம் ஒன்று கட்டுவோமா? ஆம், என்ன பட்டம் கட்டலாம்? கொக்குப் பட்டம் கட்டலாம். வேறு என்ன பட்டம் கட்டலாம்? பருந்துப் பட்டம் கட்டலாம்.

அ. பின்வருவனவற்றுக்கு விடை கூறுங்கள்:

1. பட்டம் கட்டுவதற்குத் தேவையான பொருள்கள் எவை?
2. சிறுவர்கள் பட்டம் விடுவதற்கு எங்கே போனார்கள்?
3. அமீர் ஈர்க்கை என்ன செய்தான்?
4. பட்டம் கட்டியவர் யார்?
5. சுந்தரமும் அமீரும் பாலனும் ஏன் மகிழ்ந்தார்கள்?

ஆ. சரியான சொல்லை அடைப்புக்குள்ளிருந்து தெரிவுசெய்து உங்களுடைய பயிற்சிப் புத்தகத்தில் எழுதுங்கள்:

1. சுந்தரம் (விளையாடினான்/ விழையாடினான்/ விலையாடினான்).
2. பட்டத்துக்கு (வாள்/ வால்/ வாழ்) செய்தார்கள்.
3. அமீர் பட்டங் கட்ட (ஈக்கு/ ஈற்கு/ ஈர்க்கு) எடுத்தான்.
4. பாலன் (அலவாக/ அளவாக/ அழவாக) கடதாசியை வெட்டினான்.
5. சுந்தரம் எட்டு (மூலை/ மூளை/ மூழை) ப் பட்டம் கட்டினான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2. சிறுவனும் காக்கையும்



*சிறுவன்:*

காக்கையாரே,
காக்கையாரே,
எங்கே போனீர்?

*காக்கை:*

காணாத இடமெல்லாம்
காணப் போனேன்.

கண்டுவந்த புதுமைகள்
சொல்லக் கேளும்.

செட்டியார் வீட்டிற் கலியாணம்.
சிவனார் கோயிலில் விழாக் கோலம்.

மீன்பிடி துறையிற் சனக்கூட்டம்.
மேரியின் வீட்டிலே கொண்டாட்டம்.

கண்டிப் பக்கம் குளிரோ கடுமை.
காங்கேசன்துறையில் வெயிலோ கொடுமை.

*சிறுவன்:*

அப்பா, மாமா, அத்தான் கொழும்பில்,
அவர்கள் சுகத்தை அறிவீரோ?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காக்கை:

பொங்கலன்று வருவாராம்,
புத்தகம் வாங்கித் தருவாராம்.
பந்துங் கொண்டு வருவாராம்,
பாவை உமக்குத் தருவாராம்.

அ. பின்வருவனவற்றுக்கு விடை கூறுங்கள்:

1. காக்கையிடம் சிறுவன் முதலில் என்ன கேட்டான்?
2. காக்கையார் கண்டு வந்த புதுமைகளுள் இரண்டினைக் கூறுங்கள்.
3. சனக்கூட்டம் எங்கே காணப்பட்டது?
4. கொழும்பிலே சிறுவனின் உறவினர்கள் யார் யார் இருக்கின்றனர்?
5. அவர்கள் சிறுவனின் வீட்டிற்கு எப்பொழுது வருவார்கள்?

ஆ. சரியாயின் "சரி" எனவும் பிழையாயின் "பிழை" எனவும் கூறுங்கள்:

1. காங்கேசன்துறையில் குளிர் அதிகம்.
2. கண்டியில் குளிர் அதிகம்.
3. சிறுவனின் மாமா கண்டியில் இருக்கின்றார்.
4. சிறுவனின் அப்பா கொழும்பில் இருக்கின்றார்.
5. சிறுவனின் அப்பா வருடப் பிறப்பன்று வருவார்.

இ. ஒத்த சொல்லை அடைப்புக்குள்ளிருந்து தெரிந்து எடுத்துப் பயிற்சிப் புத்தகத்தில் எழுதுங்கள்:


1. பாவை (பட்டம், பந்து, பொம்மை)
   உதாரணம் : பாவை - பொம்மை.
2. கலியாணம் (திருமணம், திருவிழா, திருநாள்)
3. அப்பா (தாய், மாமா, தந்தை)
4. சனம் (மக்கள், மந்தை, மரங்கள்)
5. கோயில் (பள்ளிக்கூடம், ஆலயம், வீடு)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 3. பூனைக் குட்டிகளின் ஏமாற்றம்

ஒரு நாள் இரண்டு பூனைக் குட்டிகள் சண்டை செய்து கொண்டு நின்றன. அப்பொழுது அந்த வழியால் நாய் ஒன்று வந்தது. அது, "நீங்கள் ஏன் சண்டை செய்கிறீர்கள்?" என்று கேட்டது. அதற்குப் பூனைக் குட்டிகள் "எம்மில் எவர் வீரர் என்று அறியச் சண்டை செய்கின்றோம்" என்றன. "வீரனுக்கு என்ன பரிசு கிடைக்கும்?" என்று நாய் கேட்டது.



"இந்தப் பந்து எங்கள் அம்மா தந்தது. யார் வீரரோ அவருக்கே இது உரியது" என்று அவை கூறின.

"ஓகோ, அதற்கு ஏன் சண்டை? இங்கிருந்து அந்த மரம் நிற்கும் இடம் வரையும் ஓடுங்கள். வென்றவருக்குப் பந்து உரியது" என்று நாய் சொன்னது. பூனைக் குட்டிகள் அதன் சொல்லை நம்பி ஓடத் தொடங்கின.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாய் பந்தைக் கௌவிக்கொண்டு மறு பக்கமாக ஓடியது. பூனைக் குட்டிகள் ஏமாற்றமடைந்தன.

அ. பின்வருவனவற்றுக்கு விடை கூறுங்கள்:

1. பூனைக் குட்டிகள் ஏன் சண்டை செய்தன?
2. வெற்றி பெற்ற பூனைக் குட்டிக்குக் கிடைக்கும் பரிசு என்ன?
3. நாய் ஏன் பூனைக் குட்டிகளை ஓடச் செய்தது?
4. இறுதியில் யாருக்குப் பந்து கிடைத்தது?
5. பூனைக் குட்டிகளின் உறவு முறை என்ன?

ஆ. வெற்றிடங்களை நிரப்பி உங்கள் பயிற்சிப் புத்தகத்தில் எழுதுங்கள். இந்தப் புத்தகத்தில் எழுதக்கூடாது.

உதாரணம் :

| ஒருமை | பன்மை |
|---|---|
| பூனை | பூனைகள் |
| நாய் | .............................. |
| குட்டி | .............................. |
| பிள்ளை | .............................. |
| ஆடு | .............................. |
| பந்து | .............................. |

இ. பின்வரும் சொற்கள் ஒவ்வொன்றையும் வைத்து ஒவ்வொரு வசனம் எழுதுக:

அம்மா, பந்து, மரம், பரிசு, சண்டை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 4. புத்திமான் பலவான்


கோபாலன் புத்தி உள்ள சிறுவன். அவன் ஒரு நாள் கடற்கரையில் விளையாடினான். அப்போது கடலில் ஒரு சிறிய சாடி மிதந்து வந்தது. அதைக் கோபாலன் எடுத்தான். அதன் மூடியை ஆவலோடு திறந்தான். உள்ளிருந்து உருவம் ஒன்று வெளியே வந்தது.



அந்த உருவம் வளர்ந்து, வளர்ந்து பெரிய அரக்கன் ஆனது. கோபாலன் வியப்பு அடைந்தான். "நீ யார்?" என்று கேட்டான். அரக்கன், "நான் உன்னை விழுங்க வந்தேன்" என்று சொல்லிக்கொண்டு கிட்ட நெருங்கினான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கோபாலன் அஞ்சாமல், "அடே, இவ்வளவு பெரியவனான நீ இந்தச் சிறிய சாடிக்குள் எப்படி இருந்தாய்? ஒரு முறை இருந்து காட்டு பார்ப்போம்" என்றான். அரக்கன் சிறியவனாகிச் சாடியுள் நுழைந்தான். உடனே கோபாலன் அதனை இறுக்கி மூடிக் கடலில் எறிந்தான்.

அ. பின்வருவனவற்றுக்கு விடை கூறுங்கள்:

1. கோபாலன் கடலில் என்ன எடுத்தான்?
2. கோபாலன் ஏன் வியப்படைந்தான்?
3. கோபாலனுக்கு அரக்கன் என்ன கூறினான்?
4. கோபாலன் புத்திசாலி என்பது எப்படித் தெரியும்?
5. கோபாலன் சாடியை மூடிக் கடலில் எறியாவிட்டால் என்ன நடந்திருக்கும்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆ. பின்வரும் வாக்கியங்கள் சரியா, பிழையா என்று கூறுங்கள்:

1. கோபாலன் சாடியைக் கடலில் இருந்து எடுத்தான்.
2. கோபாலன் சாடியைத் திறந்ததால் உருவம் வெளியே வந்தது.
3. கோபாலனுடன் விளையாடுவதற்கு அவ்வுருவம் விரும்பியது.
4. கோபாலன் சாடிக்குள் நுழைந்தான்.
5. கோபாலன் சாடியை மூடிக் கடலில் எறிந்தான்.

இ. ஒழுங்கின்றி இருக்கும் சொற்களை வாக்கியம் ஆக்குங்கள்:

1. எடுத்தான், பட்டத்தை, சுந்தரம்
2. சிறுவன், உள்ள, கோபாலன், புத்தி
3. நாய், அந்த, வந்தது, வழியால்
4. அவன், மூடியை, பெட்டியின், நீக்கினான்
5. மாமா, கமலாவின், இருக்கிறார், கொழும்பில்

ஈ. ஒழுங்கின்றி இருக்கும் இந்த வாக்கியங்களைக் கருத்தமையை ஒழுங்குபடுத்துங்கள்:

1. அவன் அந்தச் சாடியைத் திறந்தான்.
2. உள்ளிருந்து உருவம் ஒன்று வெளியே வந்தது.
3. கோபாலன் கடலில் இருந்து ஒரு சாடியை எடுத்தான்.

உ. வாக்கியத்துக்குப் பொருந்துகின்ற சொல்லை உங்கள் பயிற்சிப் புத்தகத்தில் எழுதுங்கள்:

1. சாடியில் இருந்த உருவம் (வளர்ந்து, வலர்ந்து, வழர்ந்து) பெரிதாகியது.
2. அது "நான் உன்னை (விளுங்க, விலுங்க, விழுங்க) வந்தேன்" என்று பயமுறுத்தியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. அரக்கன் சிறியவனாகிச் சாடியுள் (நுழைந்தான், நுலைந்தான், நுளைந்தான்).

4. கோபாலன் சாடியைக் கடலில் (எறிந்தான், எரிந்தான்).

5. கோபாலன் ஆவலோடு (திறந்தான், திரந்தான்).



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# 5. யானை




யானை காட்டில் வாழும் மிருகம். அது மற்றைய மிருகங்களிலும் பெரியது. அதன் கண்கள் மிகச் சிறியவை. அதன் காதுகள் சுளகு போல அகன்று இருக்கும். யானையின் மூக்கு நீண்டு வளைந்திருக்கும். அது தும்பிக்கை எனப்படும். யானையின் தும்பிக்கை அதற்கு மிகவும் உதவியாக இருக்கின்றது. அது தும்பிக்கையினால் நீரை உறிஞ்சும். உறிஞ்சிய நீரை யானை வாயில் விட்டுக் குடிக்கும். அது பாரத்தையும் தும்பிக்கையினாலே தூக்கும். சிறிய ஊசியையும் எடுக்கும். யானை மிக்க பலம் உடையது. பெரிய மரங்களையும் அது தள்ளி விழுத்தக்கூடியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சில யானைகளின் கடைவாய்ப் பற்கள் இரண்டும் கொம்புகள் போல் இருக்கும். அவை தந்தம் எனப்படும். யானையின் வால் குறுகியது. அதன் நுனியிலே குஞ்சம் போன்று தடித்த மயிர்கள் உண்டு.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓலை, தழை, பழங்கள் முதலியவற்றை யானை உண்ணும். அது கரும்பை விரும்பித் தின்னும்.



சிலர் யானைகளைப் பழக்கி வேலைகளைச் செய்விப்பர். அவர்கள் விழாக் காலங்களில் சில யானைகளை அலங்கரிப்பர். அந்த யானைகளை விழாக்களில் பவனியாகக் கொண்டு செல்வர்.

அ. பின்வருவனவற்றுக்கு விடை கூறுங்கள்:

1. யானை வழமையாக எங்கு வசிக்கும்?
2. யானை தும்பிக்கையினால் என்ன செய்யும்?
3. யானை உண்ணும் உணவுகள் எவை?
4. யானையின் காதுகள் எது போல இருக்கும்?
5. யானையின் கடைவாய்ப் பற்கள் எவ்வாறு இருக்கும்?

ஆ. இடைவெளிகளை நிரப்பிப் பயிற்சிப் புத்தகத்தில் எழுதுங்கள். இந்தப் புத்தகத்தில் எழுதக்கூடாது.

1. யானை எல்லா மிருகங்களிலும்..........................................
2. யானையின் நுனி வால்..........................................போன்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. யானையின் கடைவாய்ப் பற்களை.............................எனவும் கூறுவர்.

4. யானையின் மூக்கே..........................................................................................ஆகும்.

5. விழாக் காலங்களில் யானைகள்........................................................வரும்.

இ. "அ" பகுதியில் உள்ள சொற்கள் "ஆ" பகுதியில் உள்ள சொற்களோடு ஏதோ ஒரு வகையில் தொடர்புடையன. அவற்றைத் தொடர்புபடுத்துங்கள்.

| "அ" பகுதி | "ஆ" பகுதி |
|---|---|
| யானை | செவி |
| காது | கரி |
| பல் | உலா |
| பவனி | வனம் |
| காடு | தந்தம் |

ஈ. சரியான சொல்லைத் தெரிந்தெடுத்து வாக்கியமாகப் பயிற்சிப் புத்தகத்தில் எழுதுங்கள்:

1. (அறம், அரம்) செய (விரும்பு, விறும்பு).
2. கோழி (இரை, இறை) யைக் கொத்தியது.
3. தம்பி (நீறை, நீரை) க் குடித்தான்.
4. அம்மா தலையணைக்கு (உரை, உறை) போட்டார்.
5. நான் கடற் (கரை, கறை) க்குச் சென்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 6. பயணம் போனேன்

எனது பெயர் இராமன். நான் மூன்றாம் ஆண்டிற் படிக்கிறேன். எனது மாமாவின் பெயர் கோபாலன். அவர் கொழும்பில் இருக்கிறார். போன மாதம் அவருக்குத் திருமணம் நிகழ்ந்தது. அதற்கு நான் புகைவண்டியிற் கொழும்புக்குப் போனேன். புகைவண்டி நிலையத்திலிருந்து மாமா வீட்டுக்கு "வசு" வண்டியிற் சென்றேன்.

மாமாவின் வீட்டிலிருந்து திருமணம் நடந்த கோயிலுக்கு நடந்து சென்றேன். மணமகள் வீட்டுக்குச் சென்ற மோட்டார் வண்டியில் நானும் போனேன். மாமாவின் நண்பர்களிற் பலர் மிதிவண்டியில் வந்தார்கள். நண்பர் ஒருவர் இந்தியாவிலிருந்து விமானத்தில் வந்தார். திருமண வீட்டில் நாங்கள் விருந்து உண்டோம்.

புகைவண்டிப் பயணம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. வண்டி வண்டி புகைவண்டி
வாகாய் ஓடும் புகைவண்டி
கண்டி, காலி, கொழும்பெல்லாம்
காணப் போகும் புகைவண்டி

2. இருப்புப் பாதை மேலோடி
எம்மைச் சுமந்து சென்றிடுமாம்
விருப்பத் தோடு நாமேறி
வேண்டும் இடங்கள் போய்வரலாம்.

வாகாய் அழகாய் : இருப்புப் பாதை - தண்டவாளம்.

அ. பின்வருவனவற்றுக்கு விடை கூறுங்கள்:

1. இராமன் எத்தனையாம் ஆண்டிற் படிக்கிறான்?
2. இப்பாடத்தில் வரும் வாகனங்களின் பெயர்களைக் கூறுங்கள்.
3. கோபாலனின் திருமண வீட்டிற்கு யார் யார் வந்தார்கள்?
4. மிதிவண்டியில் வந்தவர்கள் யார்?
5. இந்தியாவிலிருந்து வந்தோர் எத்தனை பேர்?

ஆ. அடைப்புக்குள் இருக்கும் பொருத்தமான சொல்லைத் தெரிந்து, வாக்கியமாகப் பயிற்சிப் புத்தகத்தில் எழுதுங்கள்:

1. இராமனின் மாமனாரின் பெயர் (பூபாலன், கோபாலன்).
2. கோபாலன் (கொழும்பில், கண்டியில்) இருக்கிறார்.
3. இராமன் கொழும்புக்கு (புகைவண்டி, வசுவண்டி) யில் சென்றான்.
4. கோபாலனின் திருமணம் (வீட்டில், கோயிலில்) நடந்தது.
5. திருமண வீட்டில் விருந்து (நடந்தது, நடக்கவில்லை).

இ. சரியான சொல்லைத் தெரிந்தெடுத்து வாக்கியமாகப் பயிற்சிப் புத்தகத்தில் எழுதுங்கள்:

1. பட்டம் (வாணத்தில், வானத்தில்) பறந்தது.
2. நாம் (கண்ணால், கன்னால்) பார்ப்போம்.
3. வைகாசிக்கு அடுத்த மாதம் (ஆணி, ஆனி).
4. பெரியோரைக் (கனம், கணம்) பண்ணு.
5. (மனம், மணம்) போன போக்கெல்லாம் போக வேண்டாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈ. இப்பயிற்சியிலுள்ள வினாக்களுக்கு உங்கள் பயிற்சிப் புத்தகத்தில் விடைகள் எழுதுங்கள். இப்புத்தகத்தில் எழுத வேண்டாம்.

பின்வரும் சொற்களை ஒருமை, பன்மை என வேறுபடுத்தி எழுதுங்கள்:

மலர்கள், நாய், நான், நாங்கள், காய், குஞ்சுகள், குருவி, வீடுகள், மேசை, கண்கள்.

| ஒருமை | பன்மை |
|---|---|
| | |

உ. பின்வரும் சொற்களுக்கு ஒத்த கருத்துள்ள சொற்களை எழுதுங்கள்:

புத்தகம் ......................................

வீடு ......................................

அச்சம் ......................................

மகிழ்ச்சி ......................................

வழி ......................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊ. பின்வரும் சொற்களுக்கு எதிர்க் கருத்துள்ள சொற்களை எழுதுங்கள் :

சூடு ....................................

சரி ....................................

வெற்றி ....................................

பெரியவர் ....................................

உறவு ....................................

எ. சொற்களை ஒழுங்குபடுத்திக் கருத்துள்ள வாக்கியங்கள் ஆக்கி எழுதுங்கள்:

1. காட்டில், மிருகம், யானை, வாழும்
2. ஓடி, குட்டிகள், விளையாடின, பூனைக்
3. ஒரு, வந்தது, கடலில், மிதந்து, சாடி
4. பிரயாணம், நான், டிகைவண்டியில், செய்தேன்
5. வருவார், பந்தும், மாமா, கொண்டு

ஏ. அடைப்புக்குள் தரப்பட்ட சொற்களில் பொருத்தமான சொல்லைத் தெரிந்து வாக்கியங்களைப் பூரணப்படுத்தி எழுதுங்கள் :

1. வேடன் வேட்டையாடச் (செல்லும், சென்றது, சென்றான்)
2. நான் கடைக்குப் (போனோம், போனேன், போனார்)
3. அப்பா வருடப் பிறப்பன்று (வந்தார், வந்தனர், வந்தது)
4. நாங்கள் பாட்டுப் (பாடுவார், பாடினார்கள், பாடுவோம்)
5. சிறுவன் காக்கையுடன் (கதைத்தான், கதைத்தனர், கதைத்தது)

ஐ. "எனது செல்லப் பிராணி" என்னும் தலைப்பில் 5 வாக்கியங்கள் எழுதுக :



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 7. தாடி அறுந்த வேடன்


இலங்கையில் உள்ள பிந்தனைக் காட்டிலே வேடன் ஒருவன் வாழ்ந்து வந்தான். அவன் நல்ல பலம் உடையவன், அவனுக்கு நீண்ட தாடியும் இருந்தது. அவன் ஒரு நாயை வளர்த்தான். அதன் பெயர் வீமன். மான், மரை, முயல், அணில் முதலிய விலங்குகளை வேட்டையாடுவதற்கு வீமன் வேடனுக்கு உதவி செய்யும். ஒரு நாள் அவ்வேடன் அணில் வேட்டைக்குப் போனான், வேட்டை ஆடும்பொழுது அவனுடைய தாடி அறுந்துவிட்டது. அது எவ்வாறு அறுந்தது என்று உங்களுக்குத் தெரியுமா ?




வீமா, வீமா, ஓடி வா, வா — அணில்
    வேட்டை யாடிப்பிடித் தூட்டுவேன், வா! வா!
தேமா மரத்திற் பதுங்கி — மாங்காய்
    தின்னும் அணிலைப் பிடிப்போம் ஒதுங்கி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மரத்தில் இருந்து குதித்தே — அடடா
வாலைக் கிளப்பிக்கொண் டோடுதே பார்! பார்!
துரத்திப் பிடி பிடி வீமா — உச்சு
சுசூ! அணில் எம்மைத் தப்பியும் போமா?




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொந்துக்குட் புகுந்தது வீமா — உந்தப்
புறத்தில் நில் அந்தப் புறத்தினில் வருவேன்
அந்தோ! என் தாடியை விடுவாய் — அந்த
அணில் தப்பிஓடி தையையோ! கெடுவாய்!

நவாலியூர் சோமசுந்தரப் புலவர்

அ. பின்வருவனவற்றுக்கு விடை கூறுங்கள்:

1. இலங்கையில் வேடர்கள் எங்கே வாழ்கின்றனர்?
2. எந்த மிருகம் வீமன் எனக் குறிப்பிடப்படுகிறது?
3. அணில் எங்கு பதுங்கி இருந்து மாங்காய் தின்றது?
4. வேடன் துரத்திய அணில் ஓடி எதனுள் மறைந்தது?
5. வேடனின் தாடி எவ்வாறு அறுந்தது?

ஆ. பின்வருவனவற்றிலுள்ள இடைவெளிகளை நிரப்பி, வாக்கியமாகப் பயிற்சிப் புத்தகத்தில் எழுதுங்கள். இந்தப் புத்தகத்தில் எழுதக்கூடாது.

உதாரணம் :

| | | |
|---|---|---|
| வேடன் நேற்று அணில் வேட்டை | ஆடினான். | (ஆடு) |
| வேடன் இன்று அணில் வேட்டை | ஆடுகிறான். | „ |
| வேடன் நாளை அணில் வேட்டை | ஆடுவான். | „ |

I. 1. வசந்தி நேற்று வீட்டுக்கு .................................................. (வா)
2. வசந்தி இன்று வீட்டுக்கு .................................................. „
3. வசந்தி நாளைக்கு வீட்டுக்கு .................................................. „

II. 1. அவர்கள் நேற்றுப் பழங்களை ........................................ (வாங்கு)
2. அவர்கள் இன்று பழங்களை ........................................ „
3. அவர்கள் நாளை பழங்களை ........................................ „



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

III. *1.* பறவை நேற்று மரத்தில் ............................................ (இரு)

*2.* பறவை இன்று மரத்தில் ............................................ „

*3.* பறவை நாளை மரத்தில் ............................................ „

IV. *1.* ஆடுகள் நேற்று ............................................ (ஓடு)

*2.* ஆடுகள் இன்று ............................................ „

*3.* ஆடுகள் நாளை ............................................ „

V. *1.* அணில் நேற்று மாங்காய் ............................................ (தின்)

*2.* அணில் இன்று மாங்காய் ............................................ „

*3.* அணில் நாளை மாங்காய் ............................................ „



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 8. ஔவையாரும், முருகனும்

ஔவையார் தமிழ் நாட்டில் வாழ்ந்தார். அவர் சிறந்த புலவர். அவர் அறிவூட்டும் பாட்டுக்களைப் பாடுவார். நல்ல அறிவுரைகளைச் சொல்லுவார். அவரை மக்கள் போற்றினர். புலவர்களும் அரசர்களும் மதித்தனர். ஔவையார் எப்போதும் கடவுளை தவறாது வணங்குவார். அவர் முருகக் கடவுளிடம் மிகுந்த விருப்பம் உடையவர்.

ஔவையார் ஒரு நாள் ஒரு காட்டு வழியால் நடந்து சென்றார். அவர் நீண்ட தூரம் நடந்துவிட்டார்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்பொழுது நேரமோ நடுப்பகல் வேளை. நல்ல வெயிலாக இருந்தது. அவரைத் தண்ணீர்த் தாகம் வருத்தியது. கடும் பசி வாட்டியது. அவர் மிகவும் களைத்துவிட்டார். எனவே, ஒரு மரத்தின் கீழ் இளைப்பாற எண்ணினார்.

வழியின் அருகே பெரிய நாவல் மரம் ஒன்று நின்றது. அவர் குடுகுடு என்று அந்த மரத்தடிக்கு ஓடிச் சென்றார். அந்த நாவல் மரத்தின் நிழலிலே சிறிது நேரம் இளைப்பாறினார்.

இளைப்பாறும்போது அவர் மேலே அண்ணாந்து பார்த்தார். மரத்திலே பழங்கள் அதிகமாக இருந்தன. அந்த மரத்திலே சிறுவன் ஒருவன் இருந்தான். அவன் நாவற் பழங்கள் தின்பதை அவர் கண்டார். "தம்பி, நீ நல்ல பிள்ளை; எனக்கும் சில பழங்கள் போடு" என்று ஔவையார் கேட்டார்.

"பாட்டி, பாட்டி, உனக்குச் சுட்ட பழம் வேண்டுமா? சுடாத பழம் வேண்டுமா?" என்று சிறுவன் கேட்டான். சுட்ட பழம் எது, சுடாத பழம் எது என்று பாட்டி சிறிது யோசித்தார். அவருக்கு அது தெரியவில்லை. எனினும், அவர் "சுட்ட பழம் போடு" என்று சொன்னார். சிறுவன் மரக்கிளையை விசையாக அசைத்தான். நன்றாகப் பழுத்த பழங்கள் கீழே விழுந்தன. அவற்றில் மண் ஒட்டிக் கொண்டது. ஔவையார் குனிந்து அப்பழங்களை எடுத்தார். பழங்களிலே ஒட்டியிருந்த மண் போகும்படி வாயால் ஊதினார். அப்பொழுது, சிறுவன் கேலியாகச் சிரித்தான். "என்ன பாட்டி, பழம் நன்றாய்ச் சுடுகிறதா?" என்று அவன் கேட்டான். அப்பொழுதுதான் சுட்ட பழம் எது, சுடாத பழம் எது என்பது ஔவையாருக்குத் தெரிந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர் வெட்கம் அடைந்தார். சிறுவன் ஒருவனிடம் நான் தோற்றுவிட்டேனே என்று வருந்தினார். "முருகா, இதுவும் உன் திருவிளையாடலா?" என்று தனக்குள் கூறினார். அப்பொழுது மரத்தில் இருந்த சிறுவன் முருகனாகக் காட்சி கொடுத்தான். ஔவையார் மிக்க மகிழ்ச்சி அடைந்தார். முருகன் கேட்டபடி பாட்டுக்கள் பல பாடினார். முருகன் ஔவையாருக்கு அருள் செய்தான்.

ஔவையார் நீண்ட காலம் வாழ்ந்து ஆத்திசூடி, கொன்றைவேந்தன், நல்வழி, வாக்குண்டாம் முதலிய பாட்டுக்களைப் பாடினார். அவற்றை நாங்களும் படித்துப் பயன் பெறுவோம்.

**அ. பின்வருவனவற்றிற்கு விடை கூறுங்கள்:**

1. ஔவையார் பாடிய நான்கு காடல்கள் கூறுக?
2. ட்லவர்களும் அரசர்களும் ஏன் ஔவையாரை மதித்தனர்?
3. "சுட்ட பழம் வேண்டுமா சுடாத பழம் வேண்டுமா" என்று யார் யாரைக் கேட்டார்?
4. சிறுவனாக வந்தவர் யார்?
5. சுட்ட பழம் என்பது எதனைக் குறிக்கும்?
   சுடாதபழம் என்பது எதனைக் குறிக்கும்?

**ஆ. இடைவெளிகளை நிரப்பி, இப்பந்தியைப் பயிற்சிப் புத்தகத்தில் எழுதுங்கள், இந்தப் புத்தகத்தில் எழுதக்கூடாது.**

ஔவையார் களைப்பின் மிகுதியால் .............................. மரத்தின் கீழ் நின்றார். நாவல் மரத்தில் ஒரு .............................. இருந்தான். அச்சிறுவன் ஔவையாரைப் பார்த்து, "பாட்டி, பாட்டி, .............................. வேண்டுமா? .............................. வேண்டுமா?" என்று கேட்டான், பாட்டி " .............................. வேண்டும்" என்றார். சிறுவன் நன்கு .............................. பழத்தை விழுத்தினான். பாட்டி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊதி ஊதிச் சாப்பிட்டார். சிறுவன் பாட்டியைப் பார்த்து, "பாட்டி, பழம் ........................................ சுடுகிறதா ?" என்று கேட்டான். பாட்டி ........................................ அடைந்தார். சிறுவன் முருகனாகக் ........................................ அவன் ஔவையாருக்கு ........................................ செய்தான்.

இ. பின்வருஞ் சொற்களுக்கு ஒத்த கருத்துள்ள சொற்களைத் தெரிவு செய்து, இரண்டு சொற்களையும் பயிற்சிப் புத்தகத்தில் எழுதுங்கள், இந்தப் புத்தகத்தில் எழுதக்கூடாது.

மன்னன், கனி, கோபம், செருக்கு, ஆனந்தம்.

1. அரசன் — ....................................
2. கர்வம் — ....................................
3. பழம் — ....................................
4. மகிழ்ச்சி — ....................................
5. சினம் — ....................................

ஈ. பொருத்தமான முடிக்கும் சொற்களைத் தெரிவுசெய்து, பயிற்சிப் புத்தகத்தில் வாக்கியமாக எழுதுங்கள். இந்தப் புத்தகத்தில் எழுதக்கூடாது.

ஓடியது, வாழ்ந்தார், வாழும், செய்கிறீர்கள், விடுகிறேன்.

1. ஔவையார் தமிழ் நாட்டில் ....................................
2. பூனையைக் கண்ட எலி ....................................
3. நான் பட்டம் ....................................
4. நீங்கள் என்ன ....................................
5. சிங்கம் காட்டில் ....................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 9. கடல்

கடலிற் பொங்கும் திரையைப் பார்
காற்றிற் சிதறும் நுரையைப் பார்

அலைகள் மோதும் கரையைப் பார்
அவைகள் தடவும் தரையைப் பார்

நுரைகள் மோதும் கரையைப் பார்
நூலிற் றூங்கும் இரையைப் பார்

ஓடும் மீன்கள் நிரையைப் பார்
ஒளிக்கும் நண்டின் விரைவைப் பார்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தூண்டில் இட்டவர் அரையைப் பார்
தூங்கும் பறியில் மீனைப் பார்

தரையில் உலவும் துரையைப் பார்
தலையிற் காணும் நரையைப் பார்

மீனை வாங்கும் துரையைப் பார்
மெல்லச் சுற்றும் சரையைப் பார்

அ. கீறிட்ட இடங்களை நிரப்பிப் பயிற்சிப் புத்தகத்தில் எழுதுங்கள். இந்தப் புத்தகத்தில் எழுதக்கூடாது.

1. கடலில் ............................................ பொங்குகிறது.
2. நூலில் தூங்குவது .................................... .
3. பறியில் ....................................................... இருக்கிறது.
4. துரை மீனைச் சரையில் ........................................... .

ஆ. பின்வரும் சொற்களை ஒத்த கருத்துள்ள சொல்லுடன் சேர்த்துப் பயிற்சிப் புத்தகத்தில் எழுதுங்கள். இந்தப் புத்தகத்தில் எழுதக்கூடாது.

நிலம், உணவு, ஓரம், அலை, கூடை, இடை, வரிசை, வேகம், பொதி, ஒளி.

உதாரணம் :

| | | | |
|---|---|---|---|
| 1. திரை | — அலை | 6. அரை | — ...................... |
| 2. தரை | — ...................... | 7. சரை | — ...................... |
| 3. இரை | — ...................... | 8. நிரை | — ...................... |
| 4. பறி | — ...................... | 9. விரைவு | — ...................... |
| 5. கரை | — ...................... | 10. மறை | — ...................... |

இ. இந்த எழுத்துக்களைக் கொண்டு ஆக்கக்கூடிய சொற்களைப் பயிற்சிப் புத்தகத்தில் எழுதுங்கள். இந்தப் புத்தகத்தில் எழுதக்கூடாது.

| | | |
|---|---|---|
| ட | ல் | க |
| ண் | ந | டு |
| கா | று | ற் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 10. ஓநாயும், ஆமையும்

ஒரு நாள் ஓர் ஓநாய் பசியால் எங்கும் அலைந்தது. கடைசியாக அது ஒரு குளக் கரைக்கு வந்தது. அங்கே ஓர் ஆமையைப் பிடித்தது.

ஓநாய் ஆமையைத் தன் கூரிய பற்களாற் கடித்தது. ஆமை தன் கால்களையும் தலையையும் உள்ளே இழுத்துக் கொண்டு கல்லைப்போற் கிடந்தது. ஓநாய் திரும்பத் திரும்பக் கடித்தது. ஆமையின் மேற் பகுதி ஓடாக இருந்தமையாற் கடிக்க முடியவில்லை.

ஓநாய் அதை எப்படி உண்ணலாம் என்று யோசித்தது. அப்போது ஆமை, "அண்ணா, அண்ணா, உங்களால் என்னை உண்ண முடியாது. என்னை இந்தக் குளத்தில் ஊறப் போடுங்கள். சிறிது நேரத்தில் இளகிவிடுவேன். பின்பு இலகுவாக உண்ண முடியும்" என்று கூறியது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓநாய் ஆமை சொன்னதை நம்பியது. அது தன் வாயால் ஆமையைக் கௌவிக்கொண்டு போனது. குளத்து நீரில் போட்டது. பின் அது தன் கால்களை ஆமையின் ஓட்டின் மேல் வைத்து அமுக்கிப் பிடித்தது. சிறிது நேரத்தின் பின் ஓநாய், "ஆமையாரே, ஆமையாரே, நன்றாக இளகிவிட்டீரா?" என்று கேட்டது.

ஆமை, "அண்ணா, நீங்கள் கால் வைத்திருக்கும் இடம் மட்டும் இளகவில்லை, சிறிது நேரம் காலை எடுங்கள்" என்றது. ஓநாய் தன் காலைத் தூக்கியது. ஆமை விரைவாக ஓடி நீருள் மறைந்தது.

அ. பின்வருவனவற்றுக்கு விடை கூறுங்கள்:

1. பசியால் அலைந்த மிருகம் எது?
2. ஆமை எங்கே இருந்தது?
3. ஆமையைப் பிடித்து ஓநாய் என்ன செய்தது?
4. ஆமையின் ஓடு நீரில் நனைந்து இளகுமா?
5. ஓநாய் ஆமையைத் தின்றதா?

ஆ. கீழேயுள்ள சொற்களைப் பொருத்தமான இடத்தில் வைத்துக் கீறிட்ட இடங்களை நிரப்பி பயிற்சிப் புத்தகத்தில் எழுதுங்கள். இந்தப் புத்தகத்தில் எழுதக்கூடாது.

பிடித்தது, ஓநாய், கடிக்க, உண்ணலாம், ஓட்டுக்குள், கல்.

ஓர் ஆமை நகர்ந்து வருவதை ........................ கண்டது. ஓநாய் ஓடிச் சென்று ஆமையைப் ........................ . ஆமை தன் கால்களையும் தலையையும் ........................ இழுத்துக் கொண்டு ........................ போலக் கிடந்தது. ஆமையின் மேற்பகுதி ஓடாய் இருந்தமையால் ஓநாய் ........................ முடியவில்லை. ஓநாய் ஆமையை எப்படி ........................ என யோசித்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 11. எலி வளையில் விருந்து

ஒரு வீட்டிற் பல எலிகள் இருந்தன. வீட்டின் அயலில் உள்ள வயலில் ஒரு வளை இருந்தது. அந்த வளையில் ஒரு சுண்டெலி வாழ்ந்து வந்தது. ஒரு நாள் வீட்டெலிகள் சுண்டெலியை விருந்துக்கு அழைத்தன. விருந்துக்கு நல்ல உணவு தேட அவ்வீட்டுக் களஞ்சியத்தில் எலிகள் நுழைந்தன.

எள் ளெடுத்தது வெள்ளெலி
கொள் ளெடுத்தது முள்ளெலி
நெல் லெடுத்தது கள்ளெலி
நெற் றெடுத்தது புற்றெலி

சுண்டெலிக்கு விருந்தாக இவற்றை அளித்தன.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எள்ளைக் கொடுத்தது வெள்ளெலி
கொள்ளைக் கொடுத்தது முள்ளெலி
நெல்லைக் கொடுத்தது கள்ளெலி
நெற்றைக் கொடுத்தது புற்றெலி

சுண்டெலி விருந்து உண்ணத் தொடங்கியது. அப்பொழுது எலிகள், "உங்கள் வயலில் இப்படி விருந்து கிடைக்குமா?" என்று சுண்டெலியைக் கேட்டன.

சுண்டெலி ஏதோ சொல்ல வாய் எடுத்தது. அப்பொழுது, "மியா" "மியா" என்ற சத்தங் கேட்டது. "ஐயோ உங்கள் விருந்து வேண்டாம். உயிர் தப்பினாற் போதும்" என்று சொல்லிக்கொண்டு சுண்டெலி ஓட்டமெடுத்தது.

அ. பின்வருவனவற்றுக்கு விடை கூறுங்கள்:

1. சுண்டெலி எங்கே வாழ்ந்து வந்தது?
2. களஞ்சியப் பகுதிக்கு எலிகள் ஏன் சென்றன?
3. களஞ்சியத்தில் எடுத்த உணவுப் பொருள்கள் எவை?
4. சுண்டெலி விருந்து வேண்டாம் என்றது ஏன்?


ஆ. பின்வரும் சொற்களில் "நான்" என்னும் சொல்லோடு பொருந்தி வரக்கூடிய சொல்லைச் சேர்த்துப் பயிற்சிப் புத்தகத்தில் எழுதுங்கள் :

1. சிரிக்கிறேன்
2. பாடுகிறேன்
3. கூவுகிறது
4. அழுகிறாய்
5. குளிக்கிறேன்
6. கண்டான்
7. வருகிறேன்
8. உண்கிறாய்
9. மூடுகிறேன்
10. குடிக்கிறது
11. எழும்புகிறார்
12. படித்தேன்
13. விளையாடினாய்
14. ஆடுகிறான்
15. சாப்பிட்டேன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 12. பிராணிகளின் கொண்டாட்டம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிங்கத்தின் வீட்டிற் கொண்டாட்டம்
சிறுத்தைகள் எல்லாம் பெருங்கூட்டம்

சிலந்தி கட்டும் வெள்ளை
குரங்கு கட்டும் மாலை

ஒட்டகம் கொட்டகை ஆக்கும்
சிவிங்கி சரங்கள் தூக்கும்

கரடி கொட்டும் மேளம்
குதிரை தட்டும் தாளம்

பாட்டுப் பாடும் குயில்கள்
நாட்டியம் ஆடும் மயில்கள்

பன்னீர் தெளிக்கும் யானை
சந்தனம் கொடுக்கும் பூனை

மான்கள் பாயை விரிக்கும்
முயல்கள் அழைத்துச் சிரிக்கும்.

அ. பின்வருவனவற்றுக்கு விடை கூறுங்கள்:

1. யார் வீட்டில் கொண்டாட்டம் நடைபெற்றது?
2. வெள்ளை கட்டியது எது?
3. குரங்கு என்ன செய்தது?
4. மேளம் அடித்தது எது?
5. விருந்தினரை வரவேற்றது எது?


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆ. பின்வருவனவற்றிலுள்ள இடைவெளிகளை ஏற்ற சொற்களால் நிரப்பி, வாக்கியமாகப் பயிற்சிப் புத்தகத்தில் எழுதுங்கள். இந்தப் புத்தகத்தில் எழுதக்கூடாது.

1. .................................... சரங்கள் தூக்கும்.

2. பூனை சந்தனம் .................................... .

3. குயில்கள் .................................... பாடும்.

4. .................................... நடனம் ஆடும்.

5. மான்கள் .................................... விரிக்கும்.

இ. ஒத்த கருத்துள்ள சொல்லைத் தெரிவு செய்து இரண்டு சொற்களையும் பயிற்சிப் புத்தகத்தில் எழுதுங்கள். இந்தப் புத்தகத்தில் எழுதக்கூடாது.

**விலங்கு, கூப்பிடு, நடனம், பாடல், பந்தல்.**

| | | | | |
|---|---|---|---|---|
| உதாரணம்: | 1. | பிராணி | — | விலங்கு |
| | 2. | நாட்டியம் | — | .............................. |
| | 3. | அழை | — | .............................. |
| | 4. | கொட்டகை | — | .............................. |
| | 5. | பாட்டு | — | .............................. |

ஈ. எதிர்க் கருத்துள்ள சொல்லைத் தெரிவு செய்து, இரண்டு சொற்களையும் பயிற்சிப் புத்தகத்தில் எழுதுங்கள். இந்தப் புத்தகத்தில் எழுதக்கூடாது.

**சிரி, இன்பம், சிறிது, சூடு, பள்ளம்.**

| | | | | |
|---|---|---|---|---|
| உதாரணம்: | 1. | குளிர் | — | சூடு |
| | 2. | பெரிது | — | .............................. |
| | 3. | மேடு | — | .............................. |
| | 4. | அழு | — | .............................. |
| | 5. | துன்பம் | — | .............................. |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 13. பழங்கள்

வசந்தி : நேற்று மாலை உம்முடைய தாயாரும், நீரும் எங்கே போனீர்கள்?

மோகன் : எங்கள் வீட்டிலே இன்று கொண்டாட்டம். அதற்குப் பழங்கள் வாங்கப் போனோம்.



வசந்தி : பழங்கள் எங்கே வாங்கினீர்கள் ?

மோகன் : அமீருடைய தந்தையாரின் கடைக்குப் பக்கத்தில் ஒரு பழக் கடை இருக்கிறது. அங்கேதான் வாங்கினோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வசந்தி : என்னென்ன பழங்கள் வாங்கினீர்கள்?

மோகன் : தோடம்பழம், மாம்பழம், அன்னாசிப்பழம், மாதுளம் பழம், விளாம்பழம், வாழைப்பழம், திராட்சைப்பழம் என்பனவற்றை வாங்கினோம்.



வசந்தி : பலாப்பழமும், பப்பாளிப்பழமும் வாங்கவில்லையா?

மோகன் : அவை எங்கள் வீட்டில் நிறைய இருக்கின்றன அதனால் அவற்றை நாங்கள் வாங்கவில்லை.

அ. பின்வருவனவற்றுக்கு விடை கூறுங்கள்:

1. அமீரின் தந்தையாரின் தொழில் என்ன?
2. மோகனும், தாயாரும் ஏன் பழங்கள் வாங்கினார்கள்?
3. அவர்கள் வாங்கிய பழங்களுள் சிறியது எது?
4. எத்தனை வகையான பழங்கள் வாங்கினார்கள்?
5. அவர்கள் பலாப்பழத்தை ஏன் வாங்கவில்லை?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆ. பின்வரும் கூற்றுக்கள் சரியாயின் சரி எனவும், பிழையாயின் பிழை எனவும் கூறுங்கள்:

1. ஒரு நாள் காலையில் மோகனும், தாயாரும் பழங்களை வாங்கினர்.

2. பழக்கடைக்குப் பக்கத்தில் அமீரின் தந்தையாரின் கடை உண்டு.

3. பப்பாளிப்பழம் கடையில் இல்லாததால் மோகன் அதை வாங்கவில்லை.

4. கோயிலுக்குக் கொண்டு செல்வதற்காகப் பழங்களை வாங்கினார்கள்.

5. அவர்கள் வாங்கிய பழங்களுள் மாதுளம் பழமும் ஒன்று.

இ. பொருத்தமானவற்றைச் சேர்த்து அப்பியாசப் புத்தகத்தில் வாக்கியமாக எழுதுங்கள்:


| | | |
|---|---|---|
| 1. | நீங்கள் | (போனீர்கள், போனாய்) |
| 2. | நாங்கள் | (வாங்கினேன், வாங்கினோம்) |
| 3. | நீ | (செய்தோம், செய்தாய்) |
| 4. | நான் | (படித்தேன், படித்தோம்) |
| 5. | நாம் | (ஓடினோம்; ஓடினேன்) |
| 6. | அவள் | (ஆடினோம், ஆடினாள்) |
| 7. | அது | (பறந்தது, பறந்தன) |
| 8. | அவன் | (பாடினார், பாடினான்) |
| 9. | அவர்கள் | (சிரித்தனர், சிரித்தோம்) |
| 10. | அவை | (நீந்தியது, நீந்தின) |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 14. உமர் பாறூக் அவர்களின் கருணை

உமர் பாறூக் அவர்கள் முஸ்லிம் நாடுகளின் சனாதிபதி (கலீபா) ஆக ஆட்சி செய்தார்கள். அவர்கள் ஏழைகளிடம் அதிக இரக்கம் உடையவர்கள். அவர்கள் சனாதிபதியாக இருந்தாலும் எளிய வாழ்க்கையே நடத்தினார்கள். இரவில் அவர்கள் தமது நாட்டைச் சுற்றிப் பார்ப்பது வழக்கம். அவ்வாறு அவர்கள் பார்த்து, நாட்டு மக்களின் குறைகளை அறிந்து, அவற்றை நீக்கினார்கள்.



ஓர் இரவு குடிசை ஒன்றிலே பிள்ளைகள் அழுஞ் சத்தம் அவர்களுக்குக் கேட்டது. உடனே உமர் பாறூக் அவர்கள் அந்தக் குடிசையை நோக்கிச் சென்றார்கள். அங்கு பிள்ளைகள் அழுவதை மறைந்து இருந்து பார்த்தார்கள். அவர்களின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாயார் சில பேரீச்சம் விதைகளை எடுத்தார்; அவற்றைப் பானையில் இட்டார்; அழுங் குழந்தைகளைப் பார்த்து, "இதோ, உணவு சமைக்கின்றேன்; படுத்துக் கொள்ளுங்கள்; எழுப்பித் தருகின்றேன்" என்று கூறினார். அடுப்பை மூட்டிப் பானையை அடுப்பில் வைத்தார். அடுப்பு எரிவதைக் கண்ட பிள்ளைகள், தாயின் சொல்லை நம்பி, அழுவதை விட்டுப் படுத்துறங்கினர்.

தாயின் கண்ணிலிருந்து கண்ணீர் வடிந்தது. கலீபா அவர்கள் இக்காட்சியைக் கண்டு கவலை கொண்டார்; ஓடோடிச் சென்று, கோதுமை மாவும் பேரீச்சம் பழமும் எடுத்தார்கள். அவற்றைத் தமது தோளிலே சுமந்துகொண்டு வந்து, கண்ணீர் வடித்த தாயின் முன் வைத்தார்கள். "இதோ, கோதுமை மாவும், பேரீச்சம்பழமும் இருக்கின்றன. விரைவாக உணவு சமைத்துப் பிள்ளைகளுடைய பசியைத் தீருங்கள்" என்றார்கள்

"ஏழைகளுக்கு அன்பு காட்டினால் இறைவன் எங்களுக்கு அருள் செய்வான்" என்ற நம்பிக்கையை உமர் பாறூக் அவர்களின் செயல் காட்டுகின்றது.

அ. பின்வருவனவற்றுக்கு விடை கூறுங்கள்:

1. உமர் பாறூக் அவர்கள் வகித்த பதவி யாது?
2. உமர் பாறூக் அவர்கள் குடிசைக்கு ஏன் சென்றார்கள்?
3. பிள்ளைகள் ஏன் அழுவதை நிறுத்தினார்கள்?
4. பிள்ளைகளின் தாய் ஏன் அழுதாள்?
5. கலீபா அவர்கள் சிறுவர்களின் பசியைத் தீர்க்க எவ்வாறு உதவினார்கள்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆ. சரியான சொல்லைத் தெரிவு செய்து பயிற்சிப் புத்தகத்தில் வாக்கியமாக எழுதுங்கள்:

1. சனாதிபதி (ஏளைகளிடம் / ஏழைகளிடம்) அன்பாய் இருந்தார்.

2. நாங்கள் (வாழ்க்கை / வாள்க்கை) முழுவதும் கற்றல் வேண்டும்.

3. (குளந்தைகள் / குழந்தைகள்) நித்திரை செய்தனர்.

4. அவள் அதிகாலையில் நித்திரை விட்டு (எழுந்தாள் / எளுந்தாள்).

5. பிள்ளைகள் பசியினால் (அளுதார்கள் / அழுதார்கள்).

6. பேரீச்சம் (பளம் / பழம்) மிகவும் இனிமையானது.

7. இறைவன் எங்களுக்கு (அருள் / அருழ்) செய்வான்.

8. அவர் சனாதிபதியாய் இருந்தபோதும் (எளிய / எழிய) வாழ்வு வாழ்ந்தார்.

9. அவர் மாவைத் (தோழிற் / தோளிற்) சுமந்து வந்தார்.

10. தாய் (பிள்ளைகளுக்கு / பிழ்ழைகளுக்கு) உணவு சமைத்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 15. தென்னாலி இராமன்

இந்தியாவிலே தென்னாலி என்னும் ஓர் ஊர் உண்டு. அங்கே சிறுவன் ஒருவன் வாழ்ந்து வந்தான். அவனுடைய பெயர் இராமன். எல்லோரும் அவனைத் தென்னாலிராமன் என்று அழைத்தனர்.

தென்னாலிராமன் மிகுந்த சாதுரியம் உடையவன். அவன் பல குறும்புகள் செய்வான்; கேட்டோர் சிரிக்கும்படி விகடமாகப் பேசுவான். அதனால் எல்லோரும் அவனை மிகவும் விரும்பினர்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருநாள் இராமன் அவ்வூர் அதிகாரியின் வீட்டுக்குச் சென்றான். அந்த அதிகாரியின் வீட்டு முற்றத்திலே பலர் கூடி நின்றனர். கூட்டத்தின் மத்தியில் மந்திரவாதி ஒருவன் நின்றான். அவனுக்கு முன்னாலே பல பொருள்கள் இருந்தன. மந்திரவாதியின் பக்கத்திலே சிறுவன் ஒருவன் இருந்தான். அவனிடம் மேளம் ஒன்று இருந்தது. அதை அவன் "டமார், டமார்" என்று அடித்தான்.

மந்திரவாதி அங்கும், இங்கும் நடந்து பற்பல வித்தைகள் செய்தான். அவன் தன்னுடைய வாயில் இருந்து பல நிற நூல்களை எடுத்தான். மடியிலே வைத்த முட்டையை வாயி லிருந்து எடுத்தான். எல்லோரும் வியப்போடு பார்த்துக்கொண்டு நின்றனர்; இடையிடையே கைதட்டி ஆரவாரம் செய்தனர். அதிகாரி மந்திரவாதியைப் புகழ்ந்து பல பரிசுகள் கொடுத்தார்.

அப்பொழுது இராமன் மந்திரவாதியின் முன்னே போய் நின்றான். அவன் மந்திரவாதியைப் பார்த்து, "ஐயா, மந்திரவாதியாரே, நீர் பல வித்தைகள் செய்து பற்பல பரிசுகளும் பெற்றீர். இப்போது, சிறுவனாகிய நான் உம்முடன் போட்டிக்கு வந்து நிற்கின்றேன். என்னோடு போட்டி போட உம்மால் முடியுமா?" என்று அச்சமின்றிக் கேட்டான்.

அதைக்கேட்ட மந்திரவாதி ஏளனமாகச் சிரித்தான். உடனே இராமன், "சிரிக்க வேண்டாம். நான் கண் மூடிக் கொண்டு செய்வதை நீர் கண்ணைத் திறந்துகொண்டு செய்தல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டும். சம்மதமா?" என்று கேட்டான். மந்திரவாதி அதற்குச் சம்மதித்தான். மக்களும், அதிகாரியும் இராமன் செய்யப்போவதை ஆவலுடன் பார்த்துக்கொண்டு இருந்தனர்.

இராமன் தன் கண்களை நன்றாக மூடினான். தன்னிரு கைகளாலும் முற்றத்து மணலை அள்ளினான்; மூடிய கண்களில் மணலைப் பலமுறை கொட்டினான். மணல் அவனுடைய கண்களுட் போகாமல் வழிந்து விழுந்தது. பின்னர், அவன் கண்களைத் திறந்தான்; மந்திரவாதியைப் பார்த்து, "நீர் கண் திறந்துகொண்டு இதனைச் செய்யும் பார்ப்போம்" என்றான்.

மந்திரவாதியாலே அதனைச் செய்ய முடியவில்லை. ஆதலால் அவன் மிகுந்த வெட்கம் அடைந்தான். மக்கள் எல்லோரும் கைதட்டி ஆரவாரித்தனர். அதிகாரி இராமனின் சாமர்த்தியத்தைப் பாராட்டிப் பரிசும் கொடுத்தார்.

**அ. பின்வருவனவற்றுக்கு விடை கூறுங்கள்:**

1. இராமனுக்குத் தென்னாலிராமன் என்னும் பெயர் ஏன் வந்தது?
2. இராமனை ஏன் மக்கள் விரும்பினர்?
3. அதிகாரியின் வீட்டு முற்றத்தில் ஏன் மக்கள் கூடி நின்றனர்?
4. மந்திரவாதி செய்த வித்தைகள் எவை?
5. இராமன் செய்த செயலை மந்திரவாதியால் ஏன் செய்ய முடியவில்லை?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆ. பின்வரும் ஆண்பாற் சொற்களுக்குப் பொருத்தமான பெண்பாற் சொற் களைத் தெரிவுசெய்து, இரண்டு சொற்களையும் பயிற்சிப் புத்தகத்தில் எழுதுங்கள். இந்தப் புத்தகத்தில் எழுதக்கூடாது.

1. மாணவி, அவள், சிறுமி, மகள், தாய்.

| ஆண் பால் | பெண் பால் |
|---|---|
| சிறுவன் | ........................................ |
| அவன் | ........................................ |
| மகன் | ........................................ |
| மாணவன் | ........................................ |
| தந்தை | ........................................ |

2. சென்றாள், வந்தாள், நின்றாள், அடித்தாள், எழுந்தாள்.

| ஆண் பால் | பெண் பால் |
|---|---|
| வந்தான் | ........................................ |
| எழுந்தான் | ........................................ |
| சென்றான் | ........................................ |
| நின்றான் | ........................................ |
| அடித்தான் | ........................................ |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இ. பின்வருவனவற்றுள் ஆண்பாற் சொற்களையும் பெண்பாற் சொற்களையும் தெரிவுசெய்து பயிற்சிப் புத்தகத்தில் எழுதுங்கள். இந்தப் புத்தகத்தில் எழுதக்கூடாது.

**தம்பி, பாட்டி, கணவன், மாமி, பாட்டன், குருடன், தங்கை, மாமன், குருடி, மனைவி.**

| ஆண் பால் | பெண் பால் |
|---|---|
| | |

ஈ. பின்வருவனவற்றுக்குப் பொருள் தருக :

வியப்பு — ஆச்சரியம்

சம்மதம் ........................................

விகடம் ........................................

அச்சம் ........................................

சாதுரியம் ........................................

புகழ்ந்து ........................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 16. சுப்பிரமணிய பாரதியார்

சுப்பிரமணிய பாரதியார் சிறந்த புலவர். அவர் சுவை நிறைந்த பாடல்களைப் பாடினார். அவரை எல்லோரும் பாரதியார் என்று அழைப்பர். அவருடைய பாடல்களைக் குழந்தைகளும் பெரியவர்களும் படிக்கிறார்கள்.



பாரதியார் தமிழ் நாட்டில் எட்டயபுரத்தில் பிறந்தார். அவருடைய தந்தையாரின் பெயர் சின்னச்சாமி ஐயர். தாயாரின் பெயர் இலக்குமி அம்மாள். பாரதியார் இளமையிலேயே தமிழ், ஆங்கிலம், சமஸ்கிருதம், இந்தி ஆகிய மொழிகளைக் கற்றார். அம்மொழிகளுள் அவருக்குத் தமிழிலேயே விருப்பம் அதிகமாய் இருந்தது.

பாரதியார் மெலிந்த உருவம் உடையவர். அவர் தடித்த மேற் சட்டையும், தலைப்பாகையும் அணிந்திருப்பார். வீரனைப் போலக் கம்பீரமாய் நடப்பார்; எல்லோரையும், "பாண்டியா" என்று அழைத்து இனிய மொழி பேசுவார். எப்பொழுதும் மகிழ்ச்சியுடன் இருப்பார். எதற்கும் அஞ்சமாட்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அச்சந் தவிர்; ஆண்மை தவறேல்; உடலினை உறுதி செய்; எண்ணுவது உயர்வு; ஏறு போல் நட" என்று பாரதியார் எல்லோருக்கும் கூறுவார். அவர் ஏழைகளுக்கு இரங்கி உதவி செய்வார்.

பாரதியார் பாலர்களுக்குப் பாப்பாப் பாட்டுப் பாடினார். அப்பாட்டுக்களைப் பிள்ளைகள் விரும்பிப் படிப்பார்கள். அவை பிள்ளைகளுக்குப் புத்திமதிகள் கூறுவன.

அ. பின்வருவனவற்றுக்கு விடை கூறுங்கள்:

1. பாரதியாரின் முழுப்பெயர் என்ன?
2. பாரதியார் எங்கு பிறந்தார்?
3. பாரதியாரின் தந்தையாரின் பெயர் என்ன?
4. பாரதியாரின் தாயாரின் பெயர் என்ன?
5. பாரதியார் விரும்பிய மொழி எது?

ஆ. இங்கே தரப்பட்டுள்ள பொருத்தமான சொற்களால் இடைவெளிகளை நிரப்பிக் கூறுங்கள் :

**வீரனைப், மெலிந்த, எல்லோரையும், மேற்சட்டையும், அழைப்பார், இனிய, அவர், மகிழ்ச்சியாக.**

பாரதியார் ................................................ உருவம் உடையவர். அவர் தடித்த ................................................ தலைப்பாகையும் அணிந்திருப்பார். அவர் ................................................ போலக் கம்பீரமாய் நடப்பார். அவர் ................................................ "பாண்டியா" என்று ................................................ அவர் ................................................ மொழி பேசுவார். அவர் எப்பொழுதும் ................................................ இருப்பார் ................................................ ................................ எதற்கும் அஞ்ச மாட்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இ. இங்கே தரப்பட்டுள்ள பொருத்தமான சொற்களால் இடைவெளிகளை நிரப்பிப் பயிற்சிப் புத்தகத்தில் எழுதுங்கள். இந்தப் புத்தகத்தில் எழுதக்கூடாது.

**தவிர், எண்ணுவது, உறுதிசெய், ஆண்மை, நட.**

1. அச்சம்........................................
2. ........................................தவறேல்
3. உடலினை........................................
4. ........................................உயர்வு
5. ஏறுபோல்........................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 17. ஆபிரகாம் இலிங்கன்

அமெரிக்க தேசத்திலே கெந்தக்கி என்னும் ஓர் ஊர் உண்டு. அங்கே ஏறத்தாழ நூற்றைம்பது ஆண்டுகளுக்கு முன் சிறுவன் ஒருவன் வாழ்ந்தான். அவனுடைய பெயர் ஆபிரகாம் இலிங்கன். அவனின் பெற்றோர் வறியவர்கள் எனவே, பெற்றோருடன் சேர்ந்து இலிங்கனும் வயலில் வேலை செய்வது வழக்கம். அதனால் அவன் பாடசாலைக்குச்






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சென்று கல்வி கற்க முடியவில்லை. ஆனால், அவனிடம் "படிக்க வேண்டும்" என்னும் ஆர்வம் இருந்தது. அவன் ஓய்வு நேரத்தில் பிறரிடம் புத்தகங்களை இரவல் வாங்கிப் படிப்பான்.

இலிங்கனுடைய வீட்டுக்கு அண்மையிற் பிரபு ஒருவர் இருந்தார். அவரிடம் இலிங்கன் ஒரு புத்தகத்தை இரவல் வாங்கினான். அவன் அன்றிரவு நெடுநேரம் வரை அப்புத்தக கத்தைப் படித்தான. அப்பொழுது அவனுக்கு நித்திரை வந்தது. அவன் புத்தகத்தை ஒரு யன்னல் அருகில் வைத்து விட்டுப் படுத்தான். காலையில் எழுந்து அப்புத்தகத்தைப் பார்த்தான். அன்றிரவு பெய்த மழையினால் அது நனைந் திருந்தது. அவன் மிகுந்த துக்கம் அடைந்தான். அவன் கண்ணீர்விட்டு அழுதான். நனைந்த புத்தகத்தை எடுத்துக் கொண்டு பிரபுவின் வீட்டுக்கு ஓடினான். அவன் பிரபுவின் முன்னால் நின்று அழுதான்; அவரிடம் நடந்தவற்றைக் கூறி மன்னிப்புக் கேட்டான்.



இலிங்கன் பிரபுவைப் பார்த்து, "ஐயா, உங்களுடைய புத்தகத் தின் பெறுமதியை என்னாலே கொடுத்தல் இயலாது. அதனால் மூன்று நாள்களுக்கு உங்கள் தோட்டத்திலே கூலி பெறாது வேலை செய்ய விரும்புகிறேன். அதற்கு உத்தரவு தாருங்கள்" என்று கேட்டான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரபு இலிங்கனுடைய உயர்ந்த குணத்தையும் பணிவையுங் கண்டு மனம் மகிழ்ந்தார். அவர் அந்தப் புத்தகத்தை அவனுக்கே பரிசாகக் கொடுத்தார். அத்துடன், "தோட்டத்திலே வேலை செய்ய வேண்டாம்" என்றுங் கூறினார். ஆனால் இலிங்கனுடைய மனம் அமைதி அடையவில்லை. எனவே, பிரபு அவனுடைய விருப்பத்தை நிறைவேற்றுவதற்கு இசைந்தார். இலிங்கன் பிரபுவின் தோட்டத்தில் மூன்று நாள்கள் வேலை செய்தான். அதன் பின்னரே அவனுடைய மனம் அமைதி அடைந்தது.

அடக்கமும், நேர்மையும் உள்ள ஆபிரகாம் இலிங்கன் பிற்காலத்தில் அமெரிக்கா தேசத்தின் சனாதிபதியாய் விளங்கினான்.

**அ. பின்வருவனவற்றுக்கு விடை கூறுங்கள்:**

1. ஆபிரகாம் இலிங்கன் எங்கு வாழ்ந்தான்?
2. அவன் ஏன் தோட்டத்தில் வேலை செய்தான்?
3. இலிங்கன் ஏன் அழுதான்?
4. அவன் பிரபுவிடம் என்ன சொன்னான்?
5. பிற்காலத்தில் இலிங்கனுக்கு என்ன பதவி கிடைத்தது.

**ஆ. பின்வரும் சொற்களுக்கு எதிர்க் கருத்துள்ள சொற்களைத் தெரிவு செய்து இடைவெளிகளை நிரப்பி, இரண்டு சொற்களையும் பயிற்சிப் புத்தகத்தில் எழுதுங்கள். இந்தப் புத்தகத்தில் எழுதக்கூடாது.**

**வெறுப்பு, பின், நனைந்த, கோடை, கெட்டது.**

உதாரணம் : முன் — பின்

விருப்பு — ..........................

மாரி — ..........................

காய்ந்த — ..........................

நல்லது — ..........................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இ. பின்வரும் ஒருமைச் சொற்களுக்கு ஏற்ற பன்மைச் சொற்களையும், பன்மைச் சொற்களுக்கு ஏற்ற ஒருமைச் சொற்களையும் இட்டு இடைவெளிகளை நிரப்பி, பயிற்சிப் புத்தகத்தில் இரண்டு சொற்களையும் எழுதுங்கள். இந்தப் புத்தகத்தில் எழுதக்கூடாது.

உதாரணம்:


| ஒருமை | பன்மை |
| --- | --- |
| நீ | நீங்கள் |
| நான் | ........................... |
| ........................... | அவை |
| கோழி | ........................... |
| ........................... | நாய்கள் |
| ........................... | புத்தகங்கள் |
| வறியவர் | ........................... |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 18. அப்பிள் பழமும், நியூற்றனும்

இங்கிலாந்திலே நியூற்றன் என்ற சிறுவன் ஒருவன் இருந்தான். அவனுடைய அப்பா இறந்துவிட்டார். அவனுடைய அம்மாவிடம் பணம் அதிகம் இல்லை. ஆனால், அவன் பாட சாலையிலே திறமையாகப் படித்து வந்தான். விளையாட்டுக்காக அவன் காற்றாடி யந்திரம், பட்டம் ஆகியவற்றைச் செய்தான். அவன் படங்களும் நன்றாக வரைந்தான். அவனுடைய அம்மாவிடம் தோட்டம் ஒன்று இருந்தது. அங்கு அவன் வேலை செய்வான் என்று அம்மா நினைத்தார். அங்கும் நியூற்றன் வேலை செய்யவில்லை. எனவே, அம்மா அவனை மெற்படிப்புக்கு அனுப்பினார். நியூற்றன் இப்பொழுது வளர்ந்து விட்டார்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற்படிப்பில் அவர் கணிதத்தை விரும்பிப் படித்தார். விடுமுறைக்கு வீட்டுக்கு வந்தார். ஒரு நாள் வெயில் கடுமையாக இருந்தது. அவர் தம் தோட்டத்துக்குப் போனார். அங்கே, ஒரு அப்பிள் மரம் நின்றது. அதன் கீழே அவர் களையாறினார். அப்பொழுது, அப்பிள் பழம் ஒன்று அவருடைய தலையில் விழுந்தது. அவர் சிந்திக்கத் தொடங்கினார். "இந்த அப்பிள் பழம் மேலே போயிருக்கலாமே; ஏன் இது கீழே விழுந்தது" என்று அவர் யோசித்தார். இதற்குக் காரணம் புவியின் இழுப்புச் சக்தி என்பதை அவர் கண்டுபிடித்தார். இந்தக் கண்டுபிடிப்பினால் விஞ்ஞானம் வளர்ந்தது. அவர் ஐசாக் நியூற்றன் என்று புகழ் பெற்றார். அவர் பெரிய விஞ்ஞானி ஆனார்.

பிள்ளைகளே, நியூற்றனின் சிந்தனையைப் பார்த்தீர்களா? நாமும் அவ்வாறு சிந்திக்கப் பழக வேண்டும். எல்லாவற்றையும் ஆராய வேண்டும். அப்படிச் செய்தால் நாங்களும் முன்னேறலாம்.

அ. பின்வருவனவற்றுக்கு விடை கூறுங்கள்:

1. நியூற்றன் எந்த நாட்டைச் சேர்ந்தவர்?
2. அவர் செய்த விளையாட்டுப் பொருள்கள் யாவை?
3. நியூற்றன் விரும்பிப் படித்த பாடம் என்ன?
4. அப்பிள் பழம் விழுந்த போது அவர் என்ன செய்தார்?
5. நியூற்றன் தன் சிந்தனையால் அறிந்தது என்ன?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆ. பின்வரும் வாக்கியங்களைப் பார்த்துப் பயிற்சிப் புத்தகத்தில் எழுதி, அவற்றில் சரியானவற்றைச் "சரி" என்றும், பிழையானவற்றைப் "பிழை" என்றும் அடைப்புக் குறிக்குள் எழுதுங்கள். இந்தப் புத்தகத்தில் எழுதக்கூடாது.

1. நியூற்றனின் சிந்தனையால் விஞ்ஞானம் வளர்ந்தது (.................................)

2. நியூற்றன் ஒரு பணக்காரச் சிறுவன் (.................................)

3. நியூற்றன் தோட்டத்தில் வேலை செய்தான் (.................................)

4. நியூற்றன் ஒரு விஞ்ஞானி (.................................)

5. நாங்கள் முயன்றால் முன்னேறலாம் (.................................)

இ. ஒத்த கருத்துள்ள சொல்லைத் தெரிவுசெய்து, இரண்டு சொற்களையும் பயிற்சிப் புத்தகத்தில் எழுதுங்கள், இந்தப் புத்தகத்தில் எழுதக்கூடாது.

**தந்தை, யோசனை, தேசம், கனி, தாய், பூமி.**

உதாரணம் : பழம் — கனி

அம்மா — .....................................

அப்பா — .....................................

சிந்தனை — .....................................

நாடு — .....................................

புவி — .....................................




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 19. சிங்கமும், தேனீயும்

ஒரு காட்டிலே சிங்கம் ஒன்று வசித்தது. ஒரு நாள் அது பெரிய மரம் ஒன்றின் கீழ்ப் படுத்து உறங்கியது. அப்பொழுது தேனீ ஒன்று அங்கே பறந்து வந்தது. அது சிங்கத்தின் காதில் இரைந்தது. சிங்கம் எழுந்து தேனீயைக் கோபித்துப் பார்த்தது. தேனீ அஞ்சாமல் மீண்டும் அதன் காதில் இரைந்தது.

அப்பொழுது சிங்கம், "ஏ, அற்ப பிராணியே, என்னை நீ தொந்தரவு செய்தால் உன்னை நான் கொன்று விடுவேன்; ஓடிப் போ" என்றது. அதற்கும் தேனீ பயப்படவில்லை, அது சிங்கத்தைப் பார்த்து, "என்னைப் பயமுறுத்தும் நீ யார்?" என்று கேட்டது. சிங்கம், "நானே மிருகங்களின் அரசன். என்னை ஒருவரும் எதிர்ப்பதில்லை" என்றது. அதைக் கேட்ட தேனீ சிரித்தது. பின் அது, "சிங்கமே, அப்படியானால் என்னுடன் சண்டைக்கு வா; நான் உன்னை வெல்லுவேன்" என்றது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிங்கமும் தேனீயும் சண்டை செய்தன. தேனீ சிங்கத்தின் முகத்திலே தன் கொடுக்கினாற் கொட்டியது. சிங்கம் தனது முன்னங் கால்களாலே தேனீயை நசுக்க முயன்றது. தேனீ ஒவ்வொரு முறையும் தப்பிக் கொண்டது.

சிங்கம் தேனீயை நசுக்க முயன்றபோது, நகங்களாலே தன் முகத்தைப் பலமுறை கீறியது. சிங்கத்தின் முகத்திலிருந்து இரத்தம் வழிந்தது. அதனால் அது மிக்க வேதனை அடைந்தது. எனவே, அவ்விடத்தை விட்டு ஓடத் தொடங்கியது.

தேனீ, "நான் சிங்கத்தை வென்றுவிட்டேன்" என்று எண்ணிக் கர்வம் அடைந்தது. அது சிங்கத்தைப் பார்த்து, "சிங்கமே, உன்னை நான் வென்றுவிட்டேன்" என்றது. பின்னர் அது கர்வத்தோடு பறந்து சென்றது.

தேனீ சென்ற வழியிலேயே சிலந்தி வலை ஒன்று இருந்தது. தேனீ அதைக் காணவில்லை. எனவே, அது அந்த வலையிற் சிக்கிக்கொண்டது. தப்பிச் செல்ல முடியாமல் அது துடிதுடித்தது. தேனீயைக் கண்ட சிலந்தி உடனே அதனைப் பிடித்துத் தின்றது.

அ. பின்வருவனவற்றுக்கு விடை கூறுங்கள்:

1. தேனீ சிங்கத்துக்கு என்ன செய்தது?
2. உறங்கிய சிங்கம் ஏன் எழுந்தது?
3. சிங்கமும் தேனீயும் எவ்வாறு சண்டை செய்தன?
4. தேனீ ஏன் கர்வம் அடைந்தது?
5. இக்கதையிலிருந்து நீர் கற்றுக்கொண்டது யாது?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆ. இப்பந்தியில் உள்ள இடைவெளிகளை உங்கள் பயிற்சிப் புத்தகத்தில் நிரப்பி எழுதுங்கள்:

சிங்கமும் தேனீயும் ........................................ செய்தன. தேனீ சிங்கத்தின் ........................................ தன் கொடுக்கினாற் பலமுறை ........................................ சிங்கம் தன் முன்னங் ................................ தேனீயை ................................ முயன்றது. தேனீ ஒவ்வொரு முறையும் ........................................ கொண்டது. சிங்கம் தேனீயை ........................................................ முயன்றபோது, நகங்களாலே, தன் ........................................................ பலமுறை கீறியது. சிங்கத்தின் முகத்திலிருந்து .................... வழிந்தது. அதனால் மிக்க ........................ அடைந்தது. எனவே, அது ................................ விட்டு .................................... தொடங்கியது.

இ. ஒத்தசொல் எழுதுக:

அஞ்சாமல் — ....................................................

உறங்கியது — ....................................................

கர்வம் — ....................................................

தொந்தரவு — ....................................................

சிக்கியது — ....................................................


ஈ. சிங்கத்தைப்பற்றி மூன்று வசனங்கள் எழுதுக:



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 20. உண்மை பேசு

பாரசீக நாட்டில் சிறுவன் ஒருவன் வாழ்ந்தான். அவன் தந்தையார் இறந்துவிட்டார். தாயார் இருந்தார். அந்தச் சிறுவன் தாய் சொற்படி நடப்பான். அவன் நேர்மை உள்ளவன்; உண்மை பேசுவான்; ஐந்து நேரமும் இறைவனைத் தொழுவான்; படிக்கவேண்டும் என்ற ஆவல் உடையவன். அதனால், தாய் அவனைப் பக்தாத் என்ற இடத்திற்குப் படிக்க அனுப்பினார். அந்தச் சிறுவன் ஒட்டக வியாபாரிகளுடன் சென்றான். அந்த ஒட்டக வியாபாரிகள் பாரசீகத்திலிருந்து பக்தாத்திற்குச் சென்றனர். செல்லும் வழியில் அவர்களைக் கள்வர்கள் பிடித்தனர்; அவர்கள் ஒட்டக வியாபாரிகளிடம் இருந்த பணம் முழுவதையும் பறித்தனர்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்தக் கள்வர்களில் ஒருவன் சிறுவனிடம் வந்தான். "உன்னிடம் என்ன இருக்கிறது ?" என்று கேட்டான். சிறுவன், "என்னிடம் நாற்பது பொற்காசுகள் இருக்கின்றன" என்றான். கள்வன் அதனை நம்பவில்லை. அவன் சிறுவனைத் தலைவனிடம் இழுத்துக்கொண்டு போனான். தலைவனிடமும் சிறுவன் முன்பு சொன்னதையே சொன்னான். தலைவனும் அதனை நம்பவில்லை. எனவே, அத்தலைவன், "நாற்பது பொற்காசுகள் வைத்திருக்கிறாயா? காட்டு பார்ப்போம்" என்றான். சிறுவன் தன் உடையில் மறைத்து வைத்திருந்த பணத்தைக் காட்டினான். தலைவன் அந்த நாற்பது பொற்காசுகளையும் எடுத்தான்.

அவன் சிறுவனைப் பார்த்து, "நீ காசு மறைத்து வைத்திருந்ததை ஏன் கூறினாய்?" என்று கேட்டான். "எப்பொழுதும் உண்மையே பேச வேண்டும் என்று என் தாயார் சொல்லியிருக்கிறார். அவரது சொற்படி எப்பொழுதும் உண்மையே பேசுவேன்" என்று சிறுவன் கூறினான். அதைக் கேட்ட தலைவன் சிறிது நேரம் பேசாமல் இருந்தான். பின்பு வருத்தத்தோடு, "களவு எடாதே என்று இறைவன் சொல்லியிருக்கிறான். அப்படிச் சொல்லியிருக்கவும் நான் களவு எடுக்கிறேன். ஆனால் இந்தச் சிறுவனோ தாய் சொற்படி உண்மை பேசுகின்றான். இவன் எவ்வளவு நல்லவன். இறைவனே! என்னை மன்னித்துக்கொள்" என்று கூறிப் பிரார்த்தித்தான். சிறுவனிடம் அந்த நாற்பது பொற்காசுகளையும் திருப்பிக் கொடுத்தான்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்னர் தலைவன் கள்வர்களைக் கூப்பிட்டான்; ஒட்டக வியாபாரிகளிடம் பறித்த பணம் முழுவதையும் திருப்பிக் கொடுக்கும்படி அவன் கூறினான். "இன்று தொடக்கம் இறைவன் சொற்படி நடப்போம்; ஐந்து நேரமும் இறைவனைத் தொழுவோம்; களவுத் தொழிலை விடுவோம்" என்று அவன் முடிவு செய்தான். அச்சிறுவனை மிகவும் புகழ்ந்தான். முகிதீன் அப்துல் காதிர் என்னும் பெரியாரே சிறுவனாக இருந்தபொழுது அவ்வாறு உண்மை பேசியவர்.

அ. பின்வருவனவற்றுக்கு விடை கூறுங்கள்:

1. ஒட்டக வியாபாரிகள் எந்த நாட்டிற்குச் சென்றார்கள்?
2. சிறுவன் எவ்வளவு பணம் வைத்திருந்தான்?
3. தாயார் சிறுவனுக்குக் கூறிய அறிவுரை என்ன?
4. சிறுவனின் என்ன செயல் கள்வனின் மனத்தைத் திருத்தியது?
5. சிறுவனைப் பற்றி என்ன கூறுவீர்கள்?

ஆ. பின்வரும் வாக்கியங்களைப் பார்த்துப் பயிற்சிப் புத்தகத்தில் எழுதி, அவற்றிலுள்ள இடைவெளிகளிற் சரியா, பிழையா என எழுதுங்கள். இந்தப் புத்தகத்தில் எழுதக்கூடாது.

1. சிறுவன் எப்பொழுதும் உண்மையே பேசுவான். ..............................
2. சிறுவன் தந்தையுடன் பக்தாத்திற்குச் சென்றான். ..............................
3. சிறுவனிடம் இருபது பொற்காசுகள் இருந்தன. ..............................
4. சிறுவனின் அறிவுரை கள்வனைத் திருத்தியது. ..............................
5. கள்வர்களின் தலைவன் சிறுவனைப் பயமுறுத்தினான். ..............................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இ. ஒத்த கருத்துள்ள சொற்களைத் தெரிவுசெய்து, இரண்டு சொற்களையும் பயிற்சிப் புத்தகத்தில் எழுதுங்கள். இந்தப் புத்தகத்தில் எழுதக்கூடாது.

**காசு, மெய், ஆடை, பிதா, மாதா.**

தொழு — வணங்கு

உண்மை — ..................................................

உடை — ..................................................

பணம் — ..................................................

தாய் — ..................................................

தந்தை — ..................................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆண்டு 3 — மாதிரி வினாப் பத்திரம்

காலம் : 1 மணித்தியாலம்

(எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுங்கள்)

1. எதிர்ப்பால் எழுதுங்கள்:

உ—ம் : தாய் — தந்தை

(அ) சிறுமி ..........................................

(ஆ) அரசி ..........................................

(இ) மாமி ..........................................

(ஈ) அக்கா ..........................................

(உ) பாட்டி ..........................................

(10 புள்ளிகள்)

2. பின்வரும் சொற்களுக்கு ஒத்த கருத்துள்ள சொற்களை எழுதுங்கள்:

(அ) இறைவன் ..........................................

(ஆ) திருடன் ..........................................

(இ) பிராணிகள் ..........................................

(ஈ) வயோதிபன் ..........................................

(உ) ஆகாயம் ..........................................

(10 புள்ளிகள்)

2. பின்வரும் சொற்களுக்கு எதிர்க்கருத்துள்ள சொற்களை எழுதுங்கள்:

(அ) அழுகை ..........................................

(ஆ) சுத்தம் ..........................................

(இ) கவலை ..........................................

(ஈ) வெற்றி ..........................................

(உ) புகழ்தல் ..........................................

(10 புள்ளிகள்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. பின்வரும் வாக்கியங்களைப் பன்மை வாக்கியங்களாக மாற்றி எழுதுங்கள் :

உதாரணம் : பூனை எலியைப் பிடித்தது.
பூனைகள் எலிகளைப் பிடித்தன.

(அ) காகம் பறந்தது ........................................
(ஆ) பழம் விழுந்தது ........................................
(இ) நான் சமைத்தேன் ........................................
(ஈ) மாடு மேய்கிறது ........................................
(உ) கிளி பழம் சாப்பிடும் ........................................

(10 புள்ளிகள்)

5. அடைப்புக்குள் உள்ள சொற்களில் பொருத்தமான சொல்லின் கீழ்க் கீறிடுக:

(அ) காகங்கள் (கரையும், கறையும்)
(ஆ) குதிரை (கணைக்கும், கனைக்கும்)
(இ) பெண் என்றால் பேயும் (இறங்கும், இரங்கும்)
(ஈ) பழகப் பழகப் பாலும் (புழிக்கும், புளிக்கும்)
(உ) அவன் கிணற்றில் (தண்ணீர், தன்னீர்) அள்ளினான்

(10 புள்ளிகள்)

2. பின்வரும் சொற்களுக்கு எதிர்க்கருத்துள்ள சொற்களை எழுதுங்கள்:

(அ) மிகவும், மாம்பழம், இனிமையானது

........................................................................................

(ஆ) ஒரு, ஔவையார், புலவர், தமிழ்

........................................................................................

(இ) "கா, கா", காகங்கள், கரைந்தன, என்று

........................................................................................

(ஈ) ஒரு, வாழ்ந்தான், சிறிய கிராமத்தில், கண்ணன்

........................................................................................

(உ) பிதாவும், முன்னறி, அன்னையும், தெய்வம்

........................................................................................

(10 புள்ளிகள்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7. தரப்பட்ட சொற்களில் பொருத்தமான சொல்லைத் தெரிந்து இடைவெளிகளை நிரப்புங்கள் :

(வரைந்தான், நியூற்றன், பணம், இறந்து, படித்து)

ஓர் ஊரிலே ஒரு சிறுவன் இருந்தான். அவன் பெயர் .................... அவனுடைய அப்பா ................ விட்டார். அவனுடைய அம்மாவிடம் ........................ அதிகம் இல்லை. ஆனால், பாடசாலையில் நன்றாகப் ............................... வந்தான். அவன் நன்றாகப் படங்களும் ...............................

(10 புள்ளிகள்)

8. தரப்பட்ட கதையை வாசித்த பின்னர் கீழே உள்ள வினாக்களுக்கு விடை எழுதுங்கள் :

இராமன் ஒரு வாத்தை வளர்த்து வந்தான். அது ஒரு நாள் ஒரு முட்டை இட்டது. அது பொன் முட்டை ஆகும். இராமன் ஒரு பேராசைக்காரன். அவன் அதிக பொன் முட்டைகளை எடுக்க விரும்பினான். உடனே வாத்தைப் பிடித்தான். ஒரு கத்தியை எடுத்து, வாத்தின் வயிற்றை வெட்டினான். அங்கே முட்டைகள் இல்லை. வாத்து இறந்துவிட்டது. தனது செயலை எண்ணி அவன் வருந்தினான்.

(அ) வாத்து என்ன முட்டை இட்டது?

(அ) இராமன் எவற்றை அதிகம் எடுக்க விரும்பினான்?

(இ) இராமன் ஏன் வாத்தின் வயிற்றை வெட்டினான்?

(ஈ) இராமன் ஏன் கத்தியை எடுத்தான்?

(உ) வாத்து ஏன் இறந்தது?

(10 புள்ளிகள்)

9. பின்வருவனவற்றுள் ஒன்றைப்பற்றி 10 வாக்கியங்கள் எழுதுக:

(அ) எமது பாடசாலை

(ஆ) காகம்

(இ) புகைவண்டி

(20 புள்ளிகள்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நம்நாட்டு இளஞ் சந்ததியினர் நலன் கருதி நம் அரசு உங்களுக்கு வழங்கும் இந்நூலை அடுத்த ஆண்டும் உங்கள் சகோதரர்களுக்கு வழங்கத்தக்க முறையில் கவனமாக வைத்துப் படிக்க.

பாடசாலைப் பெயர் :-----------------------------------------------

| | மாணவர் பெயர் | ஆண்டு | வகுப்பு ஆசிரியரின் கையொப்பம் |
|---|---|---|---|
| 2000 | | | |
| 2001 | | | |
| 2002 | | | |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org